# வீட்டில் உங்களுடைய மின்சாரம்/எரிவாயு பாவனையைக் குறைப்பதற்கான உதவிக்குறிப்புகள்.

**1. குளிர்சாதனப்பெட்டிகள், உறைவுப் பெட்டிகள் (freezers) போன்றவற்றிற்கானவை**

- வெப்பம் சீராக்கும் கருவி(thermostat) யின் வெப்பத் தெரிவினைக் குறைப்பின் ,மிகவும் கூடுதலான மின்சாரத்தை உங்களுடைய குளிர்சாதனப்பெட்டி உபயோகிக்கும் 5 டிகிரி செல்சியஸ்-க்குக் கீழ், உச்ச வெப்ப நிலை 3 டிகிரி செல்சியஸ் ஆக இருக்கையில் எந்தவொரு வெப்ப நிலையும் ஏற்றுக்கொள்ளப்படலாம்.
- குளிர்சாதனப்பெட்டி, உறைவுப்பெட்டி (freezer) போன்றவற்றில் அடைப்பானை துப்புரவுசெய்து அவை போதியளவு பொருந்தவில்லையானால் புதிய அடைப்பானைப் பொருத்தவும் .
- குளிர்சாதனப்பெட்டிகள், மற்றும் உறைவுப்பெட்டிகளில் அளவுக்கதிகமான பொருட்களை உள்ளடக்க வேண்டாம், காற்றோட்டத்திற்காகச் சுமார் 20% இடைவெளி விடவும்.

**2. சமையலுக்கானவை**

- அடுப்பில் சமைக்கும்போது, அடுப்பின் எரிவானின் (burner) அளவுக்குச் சரியான சமையல் பாத்திரத்தை நீங்கள் உபயோகிப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும். உங்களுடைய எரிவானின் அளவினும் சிறிய அளவான பாத்திரத்தைப் பாவிப்பது எரிவாயுவை விரயம் செய்யும்.
- சமையல் குறிப்பு அனுமதிக்குமானால், சமைக்கும்போது, பானை,சட்டியை மூடி சமையுங்கள். சமையல் செயல்முறையை இது துரிதப்படுத்துவது மட்டுமல்லாது, குறைந்தளவு சூட்டினை உபயோகிப்பதன்மூலம், மின்சாரம்/எரிவாயுவை சேமிக்கும்.குழுவாகச் சமைப்பது, நேரத்தை மிச்சம்பிடிப்பதுடன், குறைந்தளவு சக்தியை உபயோகிக்கும்.
- தேவைக்கு அதிகமாக சமைப்பது, நேரத்தை மிச்சம்பிடிப்பதுடன், குறைந்தளவு சக்தியை உபயோகிக்கும்.
- வெதுப்படுப்பில் (oven) உணவைச் சமைக்கும்போது, வெதுப்படுப்பின் கதவை மூடிவைக்கவும்: வெதுப்படுப்பின் கதவைத்திறந்து வைத்தால் வெப்பம் வெளியேறிவிடும், அதனால் இழந்த சூட்டினைப் பெறுவதற்கு அதிகளவு மின்சாரம்/எரிவாயு தேவைப்படும்.
- வெதுப்படுப்பின் காற்றாடியால் ஊக்குவிக்கப்படும் அமைப்பு, விரைவில் உணவைச் சமைப்பதற்கும், குறைந்தளவு மின்சாரம்/எரிவாயுயைப் பாவிப்பதற்கும், சூட்டினை தொடர்ச்சியாக வைத்துக்கொள்வதற்கும் உதவும்.

**3. வீட்டு உபகரணங்களுக்கானவை**

- உங்களுடைய எரிவாயு/மின்சார கட்டணப் பட்டியலின் 30% அளவுக்கு மின்சார உபகரணங்கள் பொறுப்பாகலாம். சாத்தியப்படுமானால், சிறிய மின்சார உபகரணங்களை உபயோகிக்கவும்.
- நுண்-மின்அலை (microwave) அடுப்புகள் அல்லது காற்றுப்பொறிப்பான் (air fyers)போன்ற, செயற்திறன்மிக்க சமையல் முறைகள், பாரம்பரிய அடுப்புகளுடன் ஒப்பிடுகையில்,குறைவான மின்சாரத்தையே செலவுசெய்கின்றன.
- தொலைக்காட்சி உட்பட, பாவனையில் இல்லாத மின்சார இணைப்பிலுள்ள வீட்டுச்சாதனங்களை அணைத்துவிடவும் தயார் நிலையிலுள்ள சக்தி இன்னும் வலுவைப் பயன்படுத்தும்.
- வீட்டு சாதனங்களைப் புதுப்பிக்க நீங்கள் நினைத்தால், நீங்கள் கொள்வனவு செய்யமுன்னர் மின்சாரத்தைக் குறிப்பிடும் நட்டசத்திர அடையாளச் சின்னங்களைப் பார்த்து சக்தி செயற்திறன்மிக்கவற்றை வாங்க ஆலோசிப்பது முக்கியமாகும். கூடுதலான நட்சத்திரங்கள் இருப்பதானது, குறைந்தளவு மின்சாரப் பாவனையைக் குறிக்கும்- இது காலப்போக்கில் கட்டணங்களைக் குறைக்கும்..

**4. விளக்குவெளிச்சத்திற்கானவை**

- LED மின்குமிழ்கள் வேறு மின்குமிழ் (bulb)களைவிட 75% வரை குறைவாகப் மின்சாரத்தைப் பயன்படுத்தும்.
- கூரை மின்குமிழ்கள் மாற்றப்பட முடியாதுவிட்டால், LED விளக்குகள் சிறந்ததோர் மாற்றீடாகும்.
- சென்சர் விளக்குகள் அல்லது நேரத்தோடு செயற்படும் விளக்குகள் மின்சார பாவனையைக் குறைக்க உதவலாம்.

**5. தண்ணீர்ப் பாவனைக்கானவை**

- சராசரியாக ஒரு வீட்டில், நீரைக்கொதிக்கவைக்க செலவாகும் மின்சாரக் கட்டணமானது, வீட்டிற்கான மின்சாரக்கட்டணத்தில் சுமார் 25% ஆகும். சாத்தியமாகும் வேளையில், கொதிநீர் பாவனையைக் குறைக்கவும்.
- நீண்டநேர குளியல்கள் கூடுமான நீர் மற்றும் எரிவாயுவைப் பயன்படுத்தும். குளியலரையில் நீங்கள் பாடுகிறீர்களா? ஒரு பாட்டுக்கான நேரமளவிற்கு ( 4 நிமிட குளியலுக்கு இலக்கு வையுங்கள்)குளிப்பதைக் கட்டுப்படுத்தி, தண்ணீர் சூடாக்கும் செலவுகளைச் சேமியுங்கள்.
- ஒரு கோப்பை தண்ணீரைக் கேட்டிலில் கொதிக்கவைப்பதை, ஒரு மின்சார அடுப்பில் (stovetop) தண்ணீரைக்



**ஆதாரங்களுக்கு மறுபக்கம் பார்க்கவும்**

கொதிக்கவைப்பதுடன் ஒப்பிடுகையில், கேட்டிலில் கொதிக்க்வைப்பது 10% வரை கூடியளவு செலவு சிக்கனமானதாகும். கேட்டில்கள் ஒன்றுக்கொன்று வேறுபடலாம்.

- உங்களிடம் ஒரு நீச்சல் தடாகம் இருந்தால், உங்களுடைய மின்சாரக் கட்டணத்தில் 20% இலிருந்து 30%வரை உங்களது தடாக இறைக்கும் பிரிவு(pump unit) பொறுப்பாகலாம். இது உங்களின் வீட்டில் மிகவும் கூடுதலான மின்சாரப் பாவனைகளில் ஒன்றாக அதனை உருவாக்கும் அத்துடன் சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தைப் பெறும் பேனல்களை நிறுவ உங்களை ஒரு சிறந்த விண்ணப்பதாரியாக்கும்.

**6. சமையல்பாத்திரங்கள் சுத்திகரிப்புக்கானவை**

- உங்களின் வீட்டில் கோப்பை கழுவும் இயந்திரம் இருந்தால், ஒரு சுழற்சியை இயக்க முன்னர், கோப்பைகள் நிறைவடையும்வரை பொறுத்திருங்கள், கோப்பை கழுவும் இயந்திரத்தை உபயோகிக்கும்போது, இதுதான் மின்சாரத்தின் அதிகளவு செயற்திறன்வாய்ந்த பாவனையாகும்.
- நீரைக் கொதிக்கவைப்பது உங்களின் கோப்பைகழுவும் இயந்திரத்திற்கான மின்சாரத்தின் மிகக்கூடுதலான பாவனைகளில் ஒன்றாகும். உங்களின் இயந்திரத்தில் ஒரு வெப்பநிலை வழிகாட்டி இருந்தால், சுமார் 50°C-இல் கழுவக்கூடியவாறு அமைப்பைப் பயன்படுத்தவும். நடுத்தர சூட்டினை அமைப்பதற்கு இது பொதுவாகக் குறைந்த, நடுத்தர வெப்ப அமைப்பில் இருக்கும்.
- கிடைக்குமானால், மின்சாரத்தையும், நீரையும் சேமிப்பதற்கு கழுவும் இயந்திரத்தின் சிக்கன சுழற்சியை உபயோகிக்கவும்.

**7. ஆடைகள் கழுவுதல், உலர்த்துதல் போன்றவற்றிற்கானவை**

-
- சூடான அல்லது கொதி நீரைவிடவும் 80% இலிருந்து 90% வரையான குறைந்த செலவை குளிர் நீர் சுழற்சி ஏற்படுத்தலாம்.
-
- சிக்கன சுழற்சி தெரிவு உங்களின் இயந்திரத்தில் இருந்தால், மின்சாரத்தையும், நீரையும் சேமிப்பதற்குப் பயன்படுத்தவும்.
- ஆடைகளை உலர்த்தக் கூடுதலான மின்சாரம் பயன்படுத்தப்படலாம். ஆயினும், குறைவாகப் பாவிக்க பல்வேறுபட்ட சாதாரண வழிமுறைகள் இருக்கின்றன. மின்சாரத்தைச் சேமிப்பதற்கு வெளியே சூரியஒளியில் ஆடைகளைக் உலர்த்தலாம், அல்லது உள்ளே துணிபோடும் சட்டங்களில் காற்றில் உலர்ந்தலாம்.
- உலர்த்தும் இயந்திரத்தில் கூடுதல் துணிகளைப் போடுவதையும் மற்றும் துணிகளை அளவுக்கும் கூடுதலாக உலர்த்துவதையும் தவிர்க்கவும், இரண்டுமே மின்சாரத்தை விரயமாக்கும்.
- திறனுடன் சுழல்வதற்கு உதவ உலர்த்தியில் பஞ்சு வடிகட்டியை (lint filter) சுத்திகரிக்கவும்.

**8. வீட்டினை வெப்பமூட்டல், குளிர்வித்தல் போன்றவற்றிற்கானவை**

- இறுக்கமான கதவுகள் மற்றும் ஜன்னல்கள் வீட்டிலிருந்து பெருந்தொகையான காற்றை இழக்கச்செய்யும், ஜன்னல்கள் மற்றும் கதவுகளின் இடைவெளிகளை அடைப்பதன்மூலம், திறமையாகச் சூடாக்கல் மற்றும் குளிரூட்டலை மேம்படுத்தலாம்.
- குளிர் காலத்தில் 40% வரையான வெப்ப இழப்புக்கு மூடப்படாத ஜன்னல்கள் காரணமாகும். சாத்தியமானால், மிதவெப்பத்தை உள்ளே வைத்துக்கொள்ள, ஜன்னலுக்குக்கீழே தடித்த, உள் உறையுடனான(lined curtains) திரைச்சீலைகளைப் பாவியுங்கள்.
- குளிர்காலத்தில், பகல் நேரத்தில், சூரியஒளியை உள்ளே விடுவதற்காகத் திரையைத் திறக்கவும், குறிப்பாக உங்களுடைய சூடாக்கும் இயந்திரம் வேலைசெய்துகொண்டிருக்கையில், இருட்டும்முன்னர் திரையை மூடவும்.
  கோடையில், நாளொன்றின் மிகச்சூடான நேரத்தில் திரையை மூடவும் அத்துடன் சூடான காற்றை வெளியேற்றவும், குளிர்ந்த காற்றை உள்ளேவிடவும், இரவில் திரைகளையும், ஜன்னல்களையும் திறக்கவும்.
- உங்களுடைய வீட்டில் குளிரூட்டி ஒன்று இருந்தால், 1 டிகிரி வெப்பநிலையைக் குறைப்பதன்மூலம், மின்சாரப் பாவனையில் 10%-வரையில் சேமிக்கலாம்.
- குளிரூட்டுவதற்கு, குளிரூட்டியில் வெப்ப நிலையை 24°C க்கும் 26°C-க்கும் இடையில் வைத்துக்கொள்ளவும். சூடாக்குவதற்கு, குளிரூட்டியில் வெப்ப நிலையை 18°C க்கும் 20°C-க்கும் இடையில் வைத்துக்கொள்ளவும்.
- கூரை அல்லது சுவரில் பொருத்தப்பட்ட காற்றாடிகள் மற்றும் எடுத்துச்செல்லக்கூடிய மின்விசிறிகள் இயங்குவதற்கு, குளிரூட்டியுடன் ஒப்பிடும்போது மிகவும் செலவு குறைந்தவையாகலாம் சில சந்தர்ப்பங்களில் அவை ஒரு மணி நேரம் இயங்குவதற்கு இரண்டு சதங்களுக்கும் குறைந்தளவு செலவாகலாம்.

**ஆதாரங்களுக்கு மறுபக்கம் பார்க்கவும்**

- கூரை மின்விசிறிகள் வருடம் முழுவதும் சௌகரியத்தை மேம்படுத்த உதவக்கூடியவை. கோடைகாலத்தில், மணிக்கூடு ஓட்டத்திற்கு எதிர்த்திசையில் கூரை மின்விசிறியை இயக்கவும். மாரிகாலத்தில், வீட்டினுள் கூரையிலிருந்து தரைமட்டம்வரை இருக்கும் வெப்பக்காற்றை இடம்பெயர்க்க மணிக்கூட்டுத்திசையில், குறைந்த வேகத்தில் இயக்குவதற்கு கூரை மின்விசிறியின் திசையை மாற்றவும். அத்துடன், நீங்கள் அறையைவிட்டுச் செல்லும்போது,கூரை மின்விசிறிகளை அணைத்துவிடுவதை உறுதிப்படுத்தவும்.
- காற்றைக் குளிர்விக்க குளிரூட்டிகள் கடினமாக வேலைசெய்யவேண்டியதில்லை என்பதனால், மின்சாரக் கட்டணங்களில் சேமிப்பதற்கு உலர் முறை (Dry mode) உதவலாம். அழுத்தி(compressor) மற்றும் காற்றாடி போன்றவற்றில், வேலைப்பளுவைக் குறைப்பது, குளிரூட்டி ஒன்றின் வாழ்க்கைக்காலத்தை நீடிக்கவும் அத்துடன் பராமரிப்புச் செலவுகளைக் குறைக்கவும் உதவலாம்.
- உங்களது குளிரூட்டியில் அழுக்கடைந்த, அடைபட்ட வடிகட்டிக்கு மாற்றீடாக துப்புரவான ஒன்றினைப் போடுவதன்மூலம் 5% இலிருந்து 15% மின்சார பாவனையைக் குறைக்கலாம். இயன்றளவு செயற்திறனுடன் செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு வருடத்தில் இரண்டுதடவைகள் உங்கள் குளிரூட்டியின் வடிகட்டியைத் (filter)துப்புரவுசெய்யவும்.

**9. பொதுவான மின்சாரம்/எரிவாயு-சேமிப்பு உதவிக்குறிப்புகள்**

- மின்சார ம்/எரிவாயு போன்றவற்றிற்கு எவ்வாறு உங்களிடமிருந்து பணம் வசூலிக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ளவும்; இதை உங்களுடைய மின்சார கட்டணச்சீட்டில் நீங்கள் பார்க்கலாம்.
  மின்சார வணிக நிறுவனத்துடன் வித்தியாசமாக தமது கட்டணச்சீட்டுகளை வெளியிடுவதுடன், சற்று வேறுபட்ட தகவல்களைத் தரக்கூடும். உங்களது கட்டணச்சீட்டை நீங்கள் புரிந்துகொள்வதில் மேலதிக உதவி வேண்டுமானால், உங்கள் மின்சார வணிக நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும் அல்லது energy.gov.au-ஐப் பார்க்கவும்.
- உங்களுடைய மின்சார/எரிவாயு பாவனையைக் கண்காணிக்கவும், அவர்களது செயலியைப் பாவித்து மின்சார/எரிவாயு நுண்ணறிவை அலசி ஆராயவும் அநேகமான மின்சாரம்/எரிவாயு வழங்குவோர்கள் உங்களை அனுமதிப்பார்கள். மேலும் அதிகளவில் அறிந்துகொள்ள உங்கள் மின்சார வணிக நிறுவனத்துடன் (சில்லறை விற்பனையாளர்) தொடர்புகொள்ளவும்.
- மிகவும் கூடியளவு மின்சார சேமிப்புகளை மேற்கொள்வதற்கு, உதாரணமாக குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், துணிமணி உலர்த்தும் இயந்திரம், கோப்பைகழுவும் இயந்திரம், குளிரூட்டி போன்ற அதிக மின்சாரத்தைப் பயன்படுத்தும் உபகரணங்களைத் திறம்படப் பாவிப்பது எவ்வாறு என்பது குறித்து நீங்கள் கவனம் செலுத்தவேண்டும்.

---


**SOURCES:**

**1. Fridges and freezers:**
energyrating.gov.au | qld.gov.au | yourhome.gov.au

**2. Cooking:**
whatswatt.com.au | energy.gov.au | sustainability.vic.gov.au

**3. Household appliances:**
energy.gov.au | sustainability.vic.gov.au | energy.gov.au | energyrating.gov.au

**4. Lighting:**
energy.gov.au

**5. Water use:**
energy.gov.au | energyrating.gov.au | insideenergy.org | sustainability.vic.gov.au

**6. Dishwashers:**
energyrating.gov.au | sustainability.vic.gov.au

**7. Washing and drying clothes:**
yourhome.gov.au | energy.gov.au | energyrating.gov.au

**8. Heating and cooling a home:**
sustainability.vic.gov.au | csiro.au | energy.gov.au | canstarblue.com.au | energy.gov | actronair.com.au

**9. General energy-saving tips:**
energy.gov.au | qld.gov.au